# நாடி தர்ப்பணம்

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பாசிரியர் | : | சிதம்பரநாத வைத்தியர் |
| முதலாவது பதிப்பு | : | 1928 |
| மீள் பதிப்பு | : | மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம். |
| ஆண்டு | : | 2011 |
| பிரதிகள் | : | 500 |
| பக்கங்கள் | : | vii + 204 |
| அட்டைப்படம் | : | க.சாரங்கன் |
| கணனி எழுத்தமைப்பு | : | சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ், கோண்டாவில். |
| அச்சுப்பதிப்பு | : | சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ், கோண்டாவில். |

# NAADI THARPPANAM

| | | |
|---|---|---|
| First Publishing Editor | : | SITHAMPARANATHA VAITHIYAR |
| First Edition Year | : | 1928 |
| Reprinting | : | Provincial Department of Indigenous Medicine, Northern Province. |
| Year | : | 2011 |
| Copies | : | 500 |
| Pages | : | vii + 204 |
| Cover Design | : | K.Sarangan |
| Computer Designing | : | Sivaranjanam offset printers, Kondavil. |
| Printed by | : | Sivaranjanam offset printers, Kondavil. |

# FOREWORD FROM HON. GOVERNOR

I consider it is a great privilege to write the foreword for reprint of an invaluable manual titled "Naadi Tharppanam". This ancient manual describes basic pulse treatment, which is the speciality of the Siddha System of Medicine.

This art have been passed through generations, and unfortunately now facing threat of loss due to lack of practice and deterioration of texts. Therefore, it is very relevant that Northen Provincial Department of Indigenous Medicine taking effort to reprint this book in order to conserve the system as well as to document the art of pulse reading. I wish that this attempt will help to initiate studies and researches on pulse reading and promote Siddha System of Medicine to contribute the Health Care of Northern People.

**G.A.Chandrasiri**
Governor
Northern Province

## வாழ்த்துரை

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கிணங்க மனிதர்கள் நோய்நொடியின்றி சிறந்த உடல்வாகுடையவர்களாக வையத்துள் வாழ்வாங்கு வாழ தெள்ளிதின் பயன்கொண்டு எமது வடமாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்ற "நாடிதர்ப்பணம்" எனும் இந்நூல் மிக்க பயன் நாட்டி இம் மண்ணுலகில் சிறந்தோங்க முதற்கண் எனது வாழ்த்துக்கள். வைத்திய சிரோன்மணி ஆறுமுகத்தின் புத்திர ராகிய சிதம்பரவைத்தியர் அவர்களால் 1928இல் தமிழில் வசன காவியமாக வெளியிடப்பட்ட இந்நூல் மீள்பதிப்பாக எமது வட மாகாணத்தால் வெளியிடப்படுவது எமது வளம்மிக்க சமுதாய வளர்ச்சிக்கு செலவற்ற எதுவித பாதகமுமற்ற ஒரு ஊக்கியமாக அமையுமென்பதில் ஐயமில்லை. எமது பழமைவாய்ந்த வல்லுநர் கள் அரும்பொருளாகத் தந்து போந்த இத்தகைய காவியங்கள் பல காலத்தால் அழிந்தொழிந்து வழக்கிழந்து அருகிப்போகும் இன்றைய நவீன யுகத்தில் தெள்ளிதின் பயன்மிகக் கண்டு இதனைப் போற்றி நூலாக்கிய அரும்செயல் நன்றே. உடலுக்குத் தீங்கற்ற பக்கவிளைவுகளற்ற பழமைவாய்ந்த வைத்திய முறைக ளால் மனிதன் நோய்நொடியின்றி நூறாண்டு வாழ்ந்த உண்மையை யார் மறப்பதிங்கே. இவ்வகையில் வாழவழியாக பழமைவாய்ந்த மருத்துவ முறைமைகளை எமது சமுதாயத்தினுள் வேரூன்ற வழி சமைக்க வேண்டிய மிக்க தேவையினை காலத்தின் கண்ணறிந்து இந்நூல் மீளப்பதிக்கப் பெற்றது நலமே.

**"உலகத்திலேயே வைத்தியன் நாடியறிவில்லாமல் பூசிக்கப்படும் தன்மையடைமாட்டான் ஆதலினாலே புத்திமானாகிய மனுஷன் படிக்கக்கடவன்"**

**"நாடியுணர்வில்லாத வைத்தியன் அறிவில்லாதவிடத்து நூல் போலவும், உப்பில்லாதவிடத்துப் போசனம் போலவும், நாயகன் அல்லாதவிடத்துப் பெண் போலவுமிருப்பான்"**

என **"நாடிஞான மவசிய மறியவேண்டுமென்பது"** என்கின்றது நாடிதர்ப்பணம். எனவே எந்தவொரு வைத்தியனும் மிகத்தெரிந் திருக்க வேண்டிய இந் நாடிதர்ப்பணம் எனும் நூல் வைத்திய தொழிலில் ஈடுபட்டுள்ள வைத்திய கலாநிதிகளுக்கும், வைத்திய ஆராய்ச்சியாளர்கள், ஏனைய வைத்தியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி நோயற்ற சமுதாயத்தை உருவாக்க

துடிக்கும் ஒவ்வொரு தனிமனிதன் வாழ்விலும் சிறந்ததொரு அருமருந்தன்ன நூலாக விளங்குமென்பதில் ஐயமென்பதில்லை. இத்துடன் நாடிதர்ப்பணம் ஒரு ஆத்மீக வழிநின்று நாடியின் இலக்ஷணங்களைப் பரீட்க்ஷைபண்ணி அறியும் முறைகளைக் கூறும் நூல் ஆகும்.

**"வைத்தியனானவன் முதலிலே ரோகத்தைப் பரீக்ஷிக்க, அதன் பின் கர்மத்தைப் பரீக்ஷிக்க, அதன்பின் ஞானத்தை முதலாகக் கொண்டு ஆசரிக்கக்கடவன்"** என்கின்றது நாடிதர்ப்பண வாகடம்.

வைத்தியன் ரோகத்தை பார்த்த பின்னும் நோயுற்றவனின் வருத்தம் போகவில்லையெனில் அது அவன் செய்த கர்ம பயனென கருதி அவன் அதற்குப் பரிகாரம் செய்து தெய்வத்தை நம்பியே சுகமடைவான் என்ற உண்மை இதனூடு தெளியப்படு கின்றது. எனவே மனிதன் பின்பற்ற வேண்டிய ஆத்மீக வழியதுவும் இதன்கண் தெளிவாவதுடன் யோகா போன்ற ஆத்மீக சிந்தனைச் செயற்பாடுகளையும் இவ் வைத்திய முறையானது தெளிவுபடுத்து கின்றது என்பதுவே நிஜம்.

**"தொற்றுநோயுற்றோர் துணைவரேயானாலும் பற்றுடன் அவரைப் பார்க்கப்போகாதே"** என்ற பழமொழிக்கேற்ப நோயானது யார் யாருக்கு இன்னது என்பதுபற்றி வராது இருப்பினும் வருமுன் காக்கும் வழிகளை தேடும் வல்லமை பெற்றவனல்லவா மனிதன். இதன்படி ஞானவழியுடன் நல்வழிபற்றி சிறப்புடன் வாழ வழிகாட்டும் இந்நூல் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

**"துப்பார்க்கு துப்பாய துப்(பு) ஆக்கி துப்பார்க்குத்**
**துப்(பு) ஆய தூ உம் மழை"**

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க உணவுகளை உண்டாக்கி தானும் உணவாகும் மழை போல பயனுறுதி கொண்ட **"நாடிதர்ப்பணம்"** எனும் இந்நூல் மீளப்பதிப்பாகும் இவ்வரிய செயல் எமக்கும் எம் மக்களுக்கும் கிடைத்த மிகப்பெரிய கைங்கரியம் ஆகும். எனவே இதுபோன்ற செயற்பாடுகள் மென் மேலும் சிறப்புற வாழ்த்துவதுடன் மேலும் பல பயன்கொண்ட நூல்களை தேடி சமுதாயத்தின் கண் வெளிக்கொணர எனது ஆசிகளை மனதார வழங்குகின்றேன்.

**ர.விஜயலட்சுமி,**
**பிரதம செயலாளர், வடமாகாணம்.**

## ஆசியுரை

சுதேச வைத்தியத்துறை திணைக்களத்தால் மீள்பதிப்பாக வெளியிடப்படுகின்ற "நாடிதர்ப்பணம்" எனும் இந்நூல் வைத்திய சிரோன்மணி ஆறுமுகம் புத்திரராகிய சிதம்பரநாத வைத்தியர் அவர்களால் தமிழில் வசன காவியமாக 1928ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலினை மீள்பதிப்பாக சுதேச வைத்தியத் துறைத் திணைக்களத்தால் வெளியிடும் முயற்சியானது சுதேச வைத்தியத்துறையின் வளர்ச்சிக்கு ஒரு உந்துகோலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய பழமைவாய்ந்த நூல்களுக்கு நவீன வடிவங்கொடுத்து வெளியிடுவதன் மூலம் "நாடிதர்ப்பணம்" எனும் இந்நூல் சுதேச வைத்தியத்துறையில் உள்ள வைத்திய கலாநிதிகளுக்கும், பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மிகுந்த பயன்மிக்கதாக இருக்கும். இத்தகைய மீள்பதிப்பு முயற்சிகள் மேன்மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

**ஆர்.இரவீந்திரன்**

**செயலாளர்**

**சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,**

**வடக்கு மாகாணம்.**

# மாகாணப் பணிப்பாளரின் உரை

வடமாகாண சபையானது சித்த பாரம்பரியம் சார்ந்த பழம்பெரும் நூல்களையும், ஏடுகளையும் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் ஒன்றான மீள்பதிப்பு செய்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில் இரண்டாவது நூலாக சிதம்பரநாத வைத்தியர் அவர்களால் தமிழில் வசன காவியமாகச் செய்யப்பட்ட **"நாடி தர்ப்பணம்"** எனும் நூலை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

நாடி பரீட்சையானது சித்த மருத்துவ சாஸ்த்திரத்தின் விஷேடமாக குறிப்பிடப்படும் ஒரு நோயாளி பரீட்சை முறையாகும். இதன்மூலம் நோயாளியின் பிரக்கிருதி (தன்மை), முன்னேற்றம் என்பவற்றுடன் ஒரு தாயின் வயிற்றில் உருவாகும் கருவின் வளர்ச்சியைக்கூட அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்டதே சித்த மருத்துவமாகும்.

எனினும் குருசிஷ்ய முறைகள் அற்றுப்போனதை அடுத்து நாடிசாஸ்திர பயிற்சிக்கு சந்தர்ப்பமின்றியுள்ள நிலையில், இன்று, அதனைப்பற்றிய பூரண அறிவுள்ளோரை காண்பது அரிதாகிப் போயுள்ளது. இச் சூழலில் நாடிதர்ப்பணம் எனும் இந்நூல் எமது கையை வந்தடைவதனை ஒரு பாக்கியமாகவே நாம் கருதுகிறோம்.

இந் நூலானது நாடி பரீட்சை பற்றிய ஓர் அறிமுகத்தைக் கொண்டுள்ளது எனக் கூறலாம். நாடிசாஸ்திரம் தொடர்பான மூல நூல்களை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் தயாரிக்கப்பட்ட தாகத் தெரிகிறது.

அந்த வகையில் வளர்ந்துவரும் சித்த மருத்துவ சமூகத்திடையே இந்நூலானது நாடிசாஸ்திரம் சம்பந்தமான ஆர்வத்தைத்தூண்டி, அதனை மீள்எழுச்சி பெறச்செய்யும் என்ற நம்பிக்கையில் இந்நூலை வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**Dr.திருமதி.சி.துரைரட்ணம்**
மாகாணப் பணிப்பாளர்,
சுதேச மருத்துவ திணைக்களம்,
வடமாகாணம்.

1. ஸ்வபாவஜரோகம் என்பது தேச சஞ்சார வித்தியாசங் களினாலும், தேகம் பருவங்களை மாறி எடுக்கும் பொழுது (தோஷங்கள்) விகாரமடைந்த வித்தியாசத்தினாலும் மிருத்தை முன்னிட்டிருக்கிற காரணத்தினாலும் தோற்றுகிற சுகவீனம் உத்தமமான இயற்கைப் பிணியென்று வழங்கும்.

2. தோஷம் என்பது தோஷங்கள் பலமடைந்து உண்டாகின்ற வியாதி. அது மித்தை உணவுகளின் சத்துப்பிறப்பித்த தன்மை இரண்டு விதம்; ஒன்று ஆமாசயத்தையிடம் பெற்றுக் கிழம்புகிற குணம், மற்றது பக்குவாசயத்திற்றங்கி உண்டாகிறது; இந்த இரண்டு தன்மையுமல்லாமல் மனத்துயரத்தால் இடைவிடாமல் சிந்தித்த மேலதிகமான குணங்கள் சாரீரத்தைப் பற்றியும், மனசைப் பற்றியும் கிளம்புகின்றது.

## மேற்படி பலமடைந்த தோஷங்கள் விருத்தியாகிற வியாதியின் தன்மை

மித்யாகாரத்தைப் புசித்த செயலினாலுண்டான குணம் கோறி மேஷத்தை வூடுருவுகின்றது. தோஷம் நாபிஸ்தானம் காரணமாக வியாதியைப் பிறப்பிக்கிறது. அதில் இரட்டித்த தன்மை ஆமாசயத்தில் வியாபிக்க அப்பொழுது தோற்றிய குணம் கோறிமேஷத்தை யூடுருவுகிறது. பின் பக்குவாசயத்தை வியாபிக்க அப்பொழுது உண்டான குணமும் கோறிமேஷத்தை யூடுருவுகிறது. கோவின் ப்ரதீதமான கிரிகையால் நிமேடத்தை மறைத்திருந்த குணங்கள் பிரிந்து உறுப்புக்களுக்குக்கு உபயோகமாகிறது. இப்படியே தோஷங்கள் பலமடைந்து கற்பிக்கிற அதிகாரம் நடக்கிறது. தோஷம் இருதயத்திற் குடிகொண்டால் அந்த ரோகம் விட்டு நீங்குகிற குணம் மனசுக்குத் துயரத்தை உண்டாக்க ரோகி மனவியசனத்தோடு சிந்திக்க அப்பொழுது உண்டாகிற குணம் மற்றும் மர்மஸ்தானங்களைச் சேரயத்தனமாகிறது. தோஷங்கள் இரட்டித்ததன்மை ஆகந்துக ரோகம்.

3. ஸகஜரோகம் - கருப்போற்பத்தி காலத்தில் தாய் தந்தையரினு திரமும் வீரியமும் தோஷமடைய வந்த காலத்தில் கோவைப் பிரத்தியக்ஷமாக்கின ரோகம் சகஜ வியாதி.

## மனுஷருடைய சீவியத்தில் தேகம் மாறி மாறி எடுக்கும் பருவங்களாவன.

01. பாலியப் பருவம் ஏழு வயதுக்குட்பட்ட காலம், இளம்பராயம் என்றும் பெயர்.

02. கௌமாரப் பருவம் - ஜெனனந் துவங்கி ஐந்து வயது வரையும் உள்ள காலம். பெண்ணுக்குப் பதினாறு வயது வரையும் நடக்கிற காலம். இதற்குப் பாலியம், இளமை, குமரன் என்றும் பெயர். குமரப் பருவமும் ஐந்து வயசு வரையுமுள்ள காலம்; ஆனால் பெண்ணுக்குப் பத்து வயது துவங்கிப் பன்னிரண்டு வயது வரையும் நடக்கிறகாலம், யாதும் பேய் பிசாசு தந்திரங்களால் பதினாறு வயது வரையும் ருதுவாகாமல் கன்னிப் பருவமாயிருப்பவளையும், குமரிப் பருவமென்று கூறும். யௌவன பருவம், விரகறியும் பருவம், இதற்கும் இளமை, பாலியம் என்று பெயர். இந்த யௌவனப் பருவம் ஆணுக்கு பதினாறு வயது தொடங்கி எழுபது வயது வரையுமுள்ள காலம். பெண்ணுக்குப் பதினாறு வயது தொடங்கி முப்பது வயது வரையும் நடக்கிற காலம். ஆணுக்கு யுவன் என்றும், பெண்ணுக்கு யுவதி என்றும் பெயர். ப்ரௌட பருவம் முப்பது வயது துவங்கி ஐம்பத்தைந்து வயது வரையும் ஒரு பெண்ணுக்கு நடக்கிற காலம். விருத்தப் பருவம் எழுபது வயதின் மேல் நடக்கிற காலம்.

## வேகங்கள் பதினாலு

அபான வாய்வு, தும்மல், மலம், மூத்திரம், கொட்டாவி, பசி, தாகம், இருமல், நித்திரை, கண்ணீர், சுக்கிலம், சுவாசம், வாந்தி, இளைப்பு என்பவைகள்.

மலம் மூன்று - மலம், மூத்திரம், வியர்வை

## சப்த தாதுக்கள்

இரசதாது, இரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சதாது, சுக்கிலதாது.

மான்றொருநாடி யயிலாடுவாதபித்த
வையம் போல் மல்கியொன்றிற்
றோன்றியிருந்தொழில் மூன்றும் புரியுமொரு
மூவரடி தொழுது கொள்வாம்.

## அலைவயடக்கம்

பூதலத் தட்டாங்கிருதயமாதி
புகல்பெரு நூல் கொளும்பிடகர்
ஆதனிங்குரைக்கும் புன் சொனுலினையு
மகத்துவர்ப் பின்றியே கொள்வர்
கோதக நீஞ்சாறு றுகனியையுநேர்
கூறிடாக்கைப் பதே சுவையாம்
பேதமார்கனியுஞ் சமமென மதிக்கும்
பெட்புறு தகைமையான் மாதோ.

## சமதாதும் திரிதோஷமும்

### வெண்பா

சீத மனலிரண்டின் சேர்க்கை சமகுணத்தால்
வாதபித் தக்கபங்கள் வாழ்க்கை துணை - யோதுசம
தாதீதா ரோக்யநிலை சாத்தந் நடை விகட
பேதமுத் தோஷமெனப் பேசு.

உ

சிவசுப்பிரமணியர் துணை

# நாடி தர்ப்பணம்

## நாடியின் இலக்ஷணங்களைப் பரீக்ஷைபண்ணி அறியும் முறைகளைக் கூறும் நூல்.

நாடிப் பரீக்ஷையாவது ஜீவநிலைமைகளைக் குறிப்பதான, தாதினிலக்கணங்களை விரல்களினால் நாடிக்குறிப்பிடங்களிற் றொட்டு அந்த இலக்கணங்களின் வேறுபாடுகளைச் சோதனை பண்ணியறிவது.

உத்தமவைத்தியன் நிதானபஞ்சகாதி இலக்கணத்தை நாடியிலக்கணத்தோடமைத்து வைத்தியத்தைத் தொடங்குவான்.

எவ்வளவு அறிகுறிகளறியப்பட்டிருந்தாலும் செய்த வைத்தியம் பலனற்றுப் போதலால் ஒற்றுமைப்பட்ட மனத்தோடு இதனைக் கேள்.

அநேக நூல்களின் சாரத்தை அனுசரித்து வைத்தியர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதாகிய நாடிப்பிரிக்ஷை மிக முயற்சியோடு முதலிலே சொல்லப்படுகின்றது.

அது எப்படியென்றால், சில இடங்களிலே நூலறிவினாலும், தேசகால வேற்றுமையினாலும், சில இடங்களிலே ஆராய்வினாலும், நாடி அறிவு தோன்றுமானாலும், சற்குருவினுபதேசத்தினாலும், தேவ அருளினாலும் முன்செய்த புண்ணியத்தினாலும், நாடி இலக்ஷணத்தை அறியும் பழக்கம் நன்றாக உண்டாகின்றது.

உலகத்திலே எங்கேயாயினும் நாடியின் பழக்கமில்லை. ஆதலால் இங்கே எது சொல்லப்படுகின்றதோ அது நன்றாக உத்தம புருடர்களாற் போற்றிக்கொள்ளப்படத்தக்கது.

நாடிகளின் கதிகள் எப்பொழுதும் வேறாக அப்பியாசப்படுத்த வேண்டும். படித்த மாத்திரத்தினாலே இங்கே நாடி ஞானமுனம் உண்டாகமாட்டாது.

நூல்களைப் படித்தலினாலுமின்று, பலவற்றைக் கேட்டலினாலு மின்றி நாடியறிவுண்டாகிறதற்கு மனுஷர்களுடைய அப்பியாசமே மேலான காரணம்.

இந்த நாடியினது நடையை அறிதற்குத் தகுந்த அப்பியாச முடைமையொன்றே வேண்டும்; அல்லது வைத்தியன் கோடியு பாயங்களிற்றானும் வல்லவனாகின்றிலன்; வைத்தியன் யோக சாதனை உடையவன் போல் நிச்சயமாகவிருத்தல் வேண்டும்.

# நாடி தர்ப்பணம்

## (இரண்டாம் பாகம்)

## 4. யூநானி மதாந்தர நாடிப்பரீக்ஷை நிதானம்

***சிவபெருமான்துதி***

**வெண்பா**

நாடிகுலக் கம்பரியை கன்றுரைக்கத் திங்களராச்
சூடியரு ளீசன் பதந்துதியே - தேடரிய
யூனான்ம தானுசா ரத்தை யுறழ்ந்தெடுத்த
தேனார் வடமொழியிற் றேர்ந்து.

யூநானி மத வைத்தியக் கொள்கையின்படி, நாடிகள் நாபி ஸ்தானத்தில் உற்பத்தியாகிக் கஹஸ்தானங்களோடு காரண மாய்த் தேகத்தில் அந்தர்கதியாகவும், பகிர்கதியாகவும் வியாபித்து உறுப்புக்களைப் போஷிக்கின்றன. அவைகளின் பூர்வாந்தங்களுக் குரிய செயல் வன்மஸ்தானங்கள் காரணமாக நாபிஸ்தானம் தோற்றுவிக்கிறது. அவைகளின் உற்பத்தி சாஸ்திரங்களை அறிந்த வைத்தியருடைய அகங் களிப்புறச் சீவாந்தத்திலும், கை பார்ப்பிக்கப்பெறுபவருடைய குறிப்பிடங்களில், ஒரு இரத்தினப் பரீக்ஷைக்கு ஒப்பாக அந்த நாடி தோற்றுகிறதும், அறிகிறதும், மறுபடி உற்பத்தியாகிறதுமாகிய இயல், இசை, நடை இலக்கணங் களை ஒரு வரிவடிவின் றன்றைபோலவே வெளிக்காட்டியும், மறைத்தும் பிரகாசிக்கச் செய்கின்றது.

ரூஹம் இரண்டு: அவை; அயவானி, நபஸானி என்பன. அயவானி இருதயத்தையும், நபஸானி மஸ்தகஸ்தையும் உயர்ந்த வருணமாக உபகரிக்கின்றன. ஆனால் தாங்கள் அனுபவிக்கிற தில்லை. அந்தச் சுகானுபவமான குணங்களை அனுபவிக்கிறது; இருதயம். அதுபோலவே இருதயஸ்தானத்தில் ஸ்தாபித்திருக்கிற நாடிகளின் நிலைமை, மனுஷருக்குத் தேக சவுக்கியமான குணங்களை உண்டாக்கி அப்பயனை அளிக்கிறது.

## ஜுலபிகரத லக்ஷணம்

கௌரிநாடியில் க்ஷத்திரம் பட்ட குணத்தில் நடக்கிற சூக்ஷ்ம கதியும், தீரகதியுந் தொய்ந்து நடக்கிறது. அதினுடைய இலக்ஷண மாகிய இரண்டு கூற்றையும், விரலிற் காட்டி நடக்கிறமிருத்துக்குரிய தாது வேறோரினமாக மாற்றிக் கையிலே காண்பிக்க அப்பொழுது தொடர்வது பித்த கபம். இரண்டும் உஷ்ணித்தெழும்பி நடக்கிறது.

(ஜுலபிகரதம் என்பது ஒரு சாதியை இன்னோரினமாக மாற்றுகிற செயல்) பார்கோஷ்டக நாடிசக்கரம்.

மேற்கூறிய நாடியில், க்ஷத்திரம் பட்ட குணத்தில் வடிவத்திற் சிறுத்து தடுக்க இயலாத ஸ்திரமான நடையாய் நடக்கிறது. அதை மர்மஸ்தானங்களுக்கு முதற்காரணமாக மாலினி தாங்கிச் செல்கிறது. இரத்தம் மாலினிநாடி மார்க்கமாக முதல் மர்மஸ் தானங்களைச் சேருகிறது. அப்பொழுது கோநிமேடம் பலம்குன்றி அந்த நாடி போஷணை செய்கிற உறுப்புகளுக்கு மந்தவிதமான பலனை அளிக்கிறது. நடை மத்திமைவிரலில் இரு கூறாகப் பிரிந்து இனமாற்றாகிற வடிவம் ஒரு தராசின் இரண்டு தட்டிலும் வைக்கப் பட்ட சமநிறையைப் போற்றனி விரலின் இரு புடையகளிலுந் தோற்றும்.

## வக்கிரகதி

புத்திமந்தம், மெய்மறதி, தடுமாற்றம், குணபேதம் ஆகிய இந்தக் குணங்களில் தோற்றுகின்ற தாதோட்டத்தின் நடை இருதயத்திற்போய் உறுதியாய் நின்று மற்றுமிந்திரியங்களையுஞ் சேருகிறது. அந்த நடைகளுக்கொப்பான இலக்ஷணம் வக்கிரா காரமான ரூக்ஷகுணம், மலபந்தமான வித்தியாசங்களும், அந்த மலசலங்கள் தங்கிப் பிரிந்து செல்லும் தானத்திற் பழக்க வழக்க மான செய்கை சந்தேகமான எண்ணத்திலும் நாடி குடில நடையில் ரூக்ஷகுணமாக நடக்கிறது.

வக்கிரரூபமாகச் சிக்ஷபண்ணுகிற நடையையுடைய நாடியின் முன்னிலையில்றோற்றுகிற தாது ரூக்ஷ குணமுடையதாய்த்,

இது பராஸிகதி அங்குஷ்ட மூலத்தில் துண்டிக்கிற காரணம். நாடி இந்திரகோபமென்னும் பூச்சியைப்போலும், மானின் முலை மடியைப் போலும், மந்தாரைப் புஷ்பத்தைப்போலும் தோற்றுவது, மிருது, நரமசொரூபம்.

### சகத்கம் – கடினம்

அந்த நாடியின் நுண்ணிய துவாரங்களில் உஷ்ணஞ் சம்பவியாதிருந்தால் அது ஞானேந்திரியங்களை அடைகிறது. நிமேடம் புரிகிற பாரஸிகதியினிலக்ஷணம் வேற்றுமைப்பட்டு அங்குஷ்ட மூலத்திற் பின்ன நடையாக நடக்கிறது. நாடி, சந்தனக் கட்டை, எலும்பு, பரல் இவைகளைப்போல் தோற்றுவது கடின சொரூபம்.

### சுகானுபவம சமம் – சமம் சுகானுபவம

நடையைச் சிந்திவிட உரிய குணத்தை மாற்றி மத்திம குணமான செயலையெடுப்பது அங்குஷ்ட மூலத்திற் பயன்படுவது அரிது; அது கர்க்கசமானது: அதிக கடூரமானதுமல்ல, அந்த நடை அதிகமாய் வளைந்தது அதனால் ஞானேந்திரியங்கள் சுகத்தை அனுபவிக்கின்றன. நாடி பஞ்சுபோல் மெதுமையாயும், தாமரைப் புஷ்பம் போல் மிருதுவாயும், பட்டு நூலைப்போல தூய்மையாயும் தோற்றுவது சமசொரூபம்.

## நான்காவது - பிரமாணம்

### அங்குஷ்ட மூலம், சந்திகள் நடை – இருதய இயக்கம்
### அளவின்கூறு பிரிந்துசெல்கிற – இரத்தம் பூரணமான

அந்த நாடி மூடமாயும், சீக்கிரமாயும் அசைகிறபொழுது, அதிற் சகித்து நடக்கிற இரத்தம் சந்திகளில் தங்கிப் போஷிக்கிறது. ஞானேந்திரியங்கள் திருப்தியடைகிறது. ஒருபோது ஜீவநாடி பூரணமான அறிவை வளர்க்கிறதாயுமிருக்கலாம்.

### அங்குஷ்ட மூலநடை – இருதயவியக்கம், சுகபலம் – சம

நடை சிதறி நடக்கிறபொழுது அந்த நாடி மாற்றி எடுக்கிற சீதோஷ்ண குணங்கள் சமலக்ஷண முடையவைகளாயிருந்தால், ப்ரதீதமான குணங்கள் செறிந்த கோவின் நிமேடம் கற்பிக்கிற சமநடை அங்குஷ்டமூலத்தில் நடக்கிறது.

## ஆறாவது சாத்தியாசாத்தியம்

### அங்குஷ்ட சூடுடைய – இருதய இரத்ததோட்ட ஆரம்பம் கெதி

அந்த நாடியின் சென்னி ஆடுகிற இரத்தாதார உறுப்பில் யாதேனுந் துவராம்கண்டு அல்லது அக்கவாடம்விரிந்து அற்பமா யொன்றுகிற தேகத்தின் குணம் முப்பத்தைந்து நாட்கள் சுகமுடையது. ஞானேந்திரியங்களின் உணர்ச்சிக்குத் தடைபற்றி இருக்கிற தோஷம் முறைபிறழச் சாத்தியகுணமாகிறது. இதற்கு அக்ஷரரூபகம், நாடி ஒரு ரேகாமாத்திரையில் "கம்" என்று, அல்லது "டம" என்று ஒலித்தல்.

### அங்குஷ்ட மூலநடை – இருதய வியக்கம்
### காதம் பழுதடைகிறது – விபரீதமான

அற்பமாயொன்றி விரிகிற கவாடம் அசைவற்றிருந்தாலும், அல்லது இயல்பிலேயுள்ள துவாரங்களில் மாறி நடைபெற்றாலும், நாற்பாதம நாளில் தாதுக்கள் கிரமந்தப்பி நடக்கிற பயனுடைய தாகின்றன. ஞானேந்திரியங்களைத் தடைசெய்கிற பாசத்தின் செயல்மூடி அசாத்திய குணமாகிறது. இதற்கு அக்ஷரரூபம் ஒரு விநாடியில் "ட்ட" என்று முப்பத்தைந்து முறை பேசினாலும் "ட" என்பது நான்கக்ஷரத்தில் வடமொழி வைத்தியநூலிற் கூறிய விதிப்படி எந்த எழுத்துடனாவது ஒலித்தாலும் அசாத்தியம்.

### அங்குஷ்ட மூலநடை – இருதய வியக்கம்,
### துண்டியாமல் நடக்கிறது – சமகுணம்

ஒழுங்கீனமாகிற அந்தத்தாது அனேக நாட்களுக்கு நிலைத்து நடவாமல் அற்ப தினங்களுக்குமாத்திரம் கிரமந்தப்பி நடக்கிற குணத்தைக்காட்டி நடந்தால், நாடியின் நடையையறிதற்கு முதற் காரணமாயுள்ள இரத்தோட்ட ஆரம்பம் கெதியாய் அசைகிறது.

நாடி நடையின் பிரதிஸ்பந்தனம் தர்ச்சனிவிரலிற் தோற்றுவது, இடைவிடாத முயற்சியுடையவருக்கும், கர்மரோகத்தை அனுபவிப் பவருக்கும், மனதிலே நிகழும் எண்ணத்தைக் குறிப்பினாற் தெரிவிப்பவருக்கும், சுரமுடையவருக்கும், அதிக பெலவீனமுடைய வருக்கும், இரத்தஞ் சுரக்குமாறு தேகத்தில் நெரிக்கிற பொழுதும், சோபை முதலிய அதைப்பு வகைகளிலும் என்று அறிக.

ரோகத்தின் கடுமையான குணங்கள் மாறி மாறி எடுக்கும் பொழுது நாடி நடைக்குரிய சேர்க்கையும் வேறு வேறு லக்ஷண முடைய குணங்களையெடுத்து நடக்கிறது.

சுரம், பிரதரம், விரேசனம் முதலியவைகளில் நாடி கெதியாய் அசையுந் தன்மையைப் பெறுகிறது. அதற்குரிய கெட்டகுணம், ஊக்கமற்ற தன்மை, கடினத்தன்மை கோஜாதை மூலமாக அறிய வேண்டியது.

சுர அவஸ்தை ஒரு காரணமுமில்லாமற் சடுதியாய் மாறினால், அல்லது அதுபோலவே குணத்தை மாற்றி எடுத்தால், உடனே நாடி மந்த கதியாய் நடக்கிறதற்கு துரிதகுணமான செயலைப் பரிச அங்குலியிற் காட்டுகிறது. அப்பொழுது இரத்தோட்ட ஆரம்பத்தின் சீர்ஸாதகுணமான தன்மை. சுரம்விட்டு நல்ல சுகமென்று காணப்படு வருக்கு நாடித்துடிப்பு ஒரு மினிட்டில் ஒரு தண்டமாத்திரை நடக்க வேண்டியது. அன்னிய சுகவீனமான குணங்களதிகப்பட்டால், அவைகள் கோவைச் சூழ்ந்து கொள்ளுகிறது. அதை மஸ்தகநாடி குணப்படுத்துகிறது. இந்தக் குணம் சுகத்திற்கு வராமல் விக்கின முடையதாக வந்தால் பக்ஷகாதரோகத்திற்கு ஏதுவான செயல் களை உண்டாக்கிறது. மிருத்துப்பிரதி பலமுடையதாயடைகிறது. அப்பொழுது பயங்கரமான குணம நீங்கியும் நீங்காமலுமிருக்கும்.

நாடியின் நடையை இலக்கக் குறியிற் பரீக்ஷித்தறியும், பொழுது ஏகநாடி இனமாற்றாகிறது சக்கரத்தினந்தத்தில், அது தனக்குரிய சுயகுணத்தை விட்டுக் கொடுக்கிறதில்லை. இருதயம் கற்பிக்கிற நல்ல குணம் அங்குஷ்ட மூலத்திலும் மற்றும் மர்மஸ்தானங்களிலும் நடக்கிறது.

## தே

தேகம் - கௌரிநாடி
தேனம் - வறுமை, தரித்திரம்

## தை

தைலபர்ணி - துரூடரம்

## தொ

தொந்தம்- இரண்டு சேர்ந்தது, இரண்டிரண்டாய்த் தொந்திப்பதற்கும் தொந்தம் என்று பெயர்
தொம்தொம் - இரண்டிரண்டு
தொனி - சத்தம்

## தோ

தோஷம் - வாதம், பித்தம், சிலேஷ்மம் என்பவைக்குத் தனித்தனிவுரிய பெயர், சுரதோஷம்

## ந

நம்ரம் - வளைந்தது
நலிகம் - இருதயத்தின் பக்கத்திலுள்ள மாமிசகண்டம்
நவீரம் - சிரசு
நளினம் - தாமரை
நளினி - தாமரை இதழுக்குள்ளிருக்கும் தாதுக்கொப்பானது, (நரம்பின்) கூந்தல், (நரம்பின்) தாது

## நா

நாகசேகரம் - இதில் இரண்டினம்; ஒன்று மலராத முகை, ஒன்று மலர்ந்த கூந்தல் வடிவமானது.

நாடி - நரம்பு
நாட்டம் - பார்வை, கண்
நாம - இயலுந்தன்மை
நாமம் - பெயர்
நாம் - அச்சம்
நாளம் - நரம்பு

## ரூ

ரூக்ஷம் - கடினமானது, மனதுக்கிணகாதது, சுவையிற் கரடுமுரடானது

ரூசைஷ - இதமில்லாத சுவை, வெப்பித்தது, வரண்டது

ரூபம் - கண்ணினாற் பார்த்தறிவது, உருவம், இலக்ஷணம் அமைந்திருப்பது

## ரே

ரேகை - வரி, எழுத்து, ஆயுளின் அளைவதைத் தீர்மானித்தது

ரேசநீயம் - விரேசன அவுஷதம்

ரேணு - மணல்

## ரோ

ரோகம் - வருத்தம்

ரோககாதகன் - பிராணரக்ஷக வைத்தியன்

ரோகசங்காரகன் - பிராண ரக்ஷகவைத்தியன்

ரோகாரி - பரிகாரி

## ல

லபம் - இனமாற்று

லவா - பார் லாவம்

## லா

லாலம் - விளர்த்தது, வெழுப்பானது

லாவம் - காடைப்பறவை

## லோ

லோகெம் - இரத்தாசயத்தில் இரத்தம் பிரவேசித்துப் பிறக்கும் பொழுது நடைபெறும் கிரமங்களினொன்று, நடுக்கம், அதிர்ச்சி, கிடுகிடுப்பு

## வ

வக்கிரம் - முகம், வளைந்த வடிவானது

வசர - வசாச்சலம், சப்த தாதுக்களினொன்று, மச்சா தாது விலிருந்து பேதப்பட்டது

வத்திரம் - முகம்

வஸ்தி - மூத்திரப்பை

### வா

வாதி - நியாயதுரந்தரன், வேதனை மலசலவாதை
வாம - இடது, குறுகின, வளைவான
வாரம் - ஒரு தினம்

### வி

விகிதம் - விகிதப்படி விதிக்கப்பட்டது
விகுதி - ஈறு, கடைசி
வித்துத்து - மின்னல்
விபரீதம் - கஷ்டம், உற்பத்தி, மாறுபாடு, பிழையானது, இதமில்லாதது, குறுக்கானது.
விம்பாகம் - இணங்காமலிருக்கிற பகுதி, நெருக்கத்திலிருந்து இஷ்டமாகிக் கொள்ளுகிற பகுதி, எதிரிடையான பாகம்
விளம்பனம் - தாமதம், தடை, இடைஞ்சற்பண்ணல், தங்கியிருத்தல்
விளித்தல் - அழைத்தல்
விஸம - விபரீதமான

### வீ

வீசம் - தாது, வித்து
வீரியம் - பெலனுள்ளது, புருஷேந்திரியம்
வீரியலிரகித - இந்திரியமில்லாத

### வெ

வெம்பல் - கோபங்கொள்ளல்
வெள்ளிலோத்திரம் - லோத்திர விருட்சத்திலிருந்தெடுக்கப்படுவது, அது இலவங்கப்பட்டை போன்றது.

### வே

வேகம் - இயல்பிலே உண்டான வாதையை அடக்காமல் விடுவது, யாதுமுரோகங்களில் அடங்கியடங்கித் தீவிரமாயெழும்புங் குணம்
வேநிரோதம் - மலமூத்திராதி வேகவங்கனை இயற்கைக்கு விரோதமாய் அடக்கிக் கொண்டிருத்தல்
வேதனம் - வேதனைப்படுதல், பிரசவ வேதனை

### வை

வைகறை - விடியற்காலம்
வைப்பு - இடம்

"Opportunities to Become a Partner for Healthcare"



இராமதேவர்
அழகர்மலை



சட்டைநாதர்
திருவரங்கம்



இடைக்காடர்
திருவண்ணாமலை



Sri Nandeeswarar



வான்மீகர்
எட்டிக்குடி



அகஸ்தியர்
அனந்தசயனம்

Department of Indigenous Medicine,
Northen Provincial Council.
2011



Printed by : Sivaranjanam Offset Printers, Palaly Road, Kondavil, T.P : 077 3068982